நிருபர்கள் தேவை
தமிழகமெங்கும் தினசரி வெளிவந்து கொண்டிருக்கும் தின தமிழ் நாளிதழுக்கு மாவட்ட வாரியாக நிருபர்கள் தேவை. நிருபராக முன் அனுபவம் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளலாம்.
தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண் : 9080728304
மின்னஞ்சல்: dhinatamil.tn@gmail.com

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்
DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85938
மாற்றத்தின் ஆரம்பம்
www.dhinatamil.com
dhinatamil

உங்கள் அபிமான தின தமிழ் செய்திகளை Whatsapp - ல் பின் தொடர

.நாகர்கோவில் பதிப்பு . 09.01.2026 . மலர் 04 . இதழ் 39. திங்கள்கிழமை
. NAGERCOIL EDITION . 09.01.2026 . VOL 04 . ISSUE 39. MONDAY . 4 PAGES . Rs.5

## விஜய்யுடன் ‘டீலிங்’... தொகுதி பங்கீடு குறித்து பேச அழைக்க மறுக்கும் திமுக

# கதறும் காங்கிரஸ்!

மதுரை, பிப்.09-

திமுகவுடன் தொகுதிப் பங்கீடு குறித்த பேச குழு அமைத்து 36 நாட்களாக காத்திருக்கிறோம் என, விருது நகர் காங்கிரஸ் எம்.பி மாணிக்கம் தாகூர் கதறினார்.

கடந்த முறை திமுக கூட்டணியில் 25 தொகுதிகளில் போட்டியிட்ட காங்கிரஸ் 18- தொகுதிகளை மட்டுமே கையகப்படுத்தியது. இந்த நிலையில், இம்முறை காங்கிரஸ் கோட்டாவை 20 தொகுதிகளுக்குள் நிறுத்துவிட வேண்டும் என திட்டம் வைத்திருந்தது திமுக தலைமை. அப்படி ஏதும் நடந்துவிடக் கூடாது என்பதற்காகவே மாணிக்கம் தாகூர், பிரவீன் சக்கரவர்த்தி போன்றவர்கள் “ஆட்சியில் பங்கு கேட்பது காங்கிரஸ் தொண்டனின் உரிமை” என்று பேச ஆரம்பித்தார்கள்.

இவர்களின் எண்ணமும் செயலும் திமுக-வை சீண்டிப் பார்க்கும் விதமாகவே இந்த நிமிடம் வரைக்கும் இருக்கிறது. வெளிப்படையாகச் சொல்வதானால், இவர்கள் எல்லாம் தவெக-வை காட்டி அறிவாலயத்துக்கு அதிர்ச்சி வைத்தியம் கொடுக்கிறார்கள். அதேசமயம், செல்வப்பெருந்தகை, சிதம்பரம் போன்றவர்கள் திமுக கூட்டணியில் இருப்பது தான் காங்கிரஸுக்கு பாதுகாப்பு என்ற கருத்தை டெல்லி வரைக்கும் சொல்லிவிட்டார்கள்.

காங்கிரஸார் பலவாறு குடைச்சல் கொடுத்தாலும் அவசரப்பட்டு எதிர்வினையாற்றாமல் அமைதியாகவே இருந்தது திமுக. ஆனால் ஒரு கட்டத்தில் பொறுமையிழந்து திமுக-வினரும், “ஆட்சி அதிகாரத்தில் பங்கு என்பதெல்லாம் ஆகாத வேலை” என்று பதிலடி கொடுக்க ஆரம்பித்தார்கள். அதேசமயம், கூட்டணிக்குள் இருக்கும் இரண்டு பெரிய கட்சிகளும் இப்படி வார்த்தை யுத்தம் நடத்துவதால் கூட்டணிக்கு பங்கம் வந்துவிடக் கூடாதே என திமுக பதறிய அளவுக்கு டெல்லி காங்கிரஸ் தலைமை இந்த விஷயத்தை சீரியஸாக எடுத்துக் கொள்ளவில்லை. அதனால் தான் இன்னமும் காங்கிரஸார் ஆளாளுக்கு திமுக-வை அதிரடித்துக் கொண்டே இருக்கிறார்கள்.

இதற்கு முற்றுப்புள்ளி வைப்பதற்காக திமுக துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி டெல்லியில் ராகுல் காந்தியைச் சந்தித்துப் பேசினார். “காங்கிரஸுடன் கூட்டணி தொடர வேண்டும் என்பதே எங்கள் விருப்பம். ஆனால், கிரிஷ் சோடங்கர், மாணிக்கம் தாகூர் போன்றவர்கள் தேவையற்ற குழப்பங்களை விளைவிக் கிறார்கள்” என கனிமொழி சொன்னதை எல்லாம் கவனமாகக் கேட்டுக் கொண்ட ராகுல், “காங்கிரஸுக்கு இம்முறை 41 தொகுதிகள், 2 ராஜ்ய சபா சீட்களை நாங்கள் எதிர்பார்க்கிறோம்” என்று தெரிவித்ததாகச் சொல்கிறார்கள். ராகுலின் இந்த டிமாண்டைக் கேட்டு அறிவாலயத் தலைவர்கள் ஆடிப் போயிருக்கிறார்கள்.

இதுகுறித்து திமுக தரப்பில் பேசியவர்கள், “கூட்டணிக் கட்சிகளுக்கு சீட் ஒதுக்கும் விஷயத்தில் இம்முறை மிகவும் கவனமாக இருக்கும் திமுக தலைமை, காங்கிரஸ் எம்எல்ஏ-க்களின் செயல்பாடுகள் குறித்தும் தனியாக ஒரு சர்வே எடுத்திருக்கிறது. அதில் 12 பேரின் செயல்பாடுகள் சொல்லிப் பெருமைப்படும்படியாக இல்லை. இவர்களுக்கெல்லாம் மீண்டும் சீட் கொடுத்தால் நிச்சயம் அங்கெல்லாம் அதிமுக கூட்டணி தான் ஜெயிக்கும் என்ற தகவலும் இருப்பதால் இம்முறை காங்கிரஸுக்கு கூடுதல் சீட்களை வழங்கும் முடிவில் தலைவர் ஸ்டாலின் இல்லை. டெல்லி தலைமை ரொம்ப அழுத்தம் கொடுத்தால் ஒன்றிரண்டு தொகுதிகள் வேண்டுமானால் கூடுதலாக ஒதுக்கப்படலாம். அவர்கள் கேட்கும் அளவுக்கெல்லாம் தொகுதிகளை ஒதுக்க வாய்ப்பே இல்லை. அதேபோல் ஆட்சி அதிகாரத்தில் பங்கு என்று கேட்பதை எல்லாம் காங்கிரஸார் மறந்துவிட வேண்டும்” என்றனர்.

இதுகுறித்து தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் அமைப்பு பொதுச் செயலாளர் செல்வத்திடம் கேட்டதற்கு, " ஆட்சி அதிகாரத்தில் பங்கு மற்றும் கூடுதல் தொகுதிகள் வேண்டும் என்பதைத் திமுக-விடம் வலியுறுத்தி வருகிறார் கிரிஷ் சோடங்கர். மற்றபடி, 41 சீட்கள் மற்றும் ராஜ்ய சபா சீட்களை காங்கிரஸ் கேட்பதாக வெளியாகும் தகவல்கள் எல்லாம் வெறும் வதந்திகளே” என்றார்.

கடைசியாக கிடைத்த தகவல்படி, காங்கிரஸுக்கு 28 தொகுதிகளை ஒதுக்குவது குறித்தி திமுக தலைமையில் ஆலோசனை நடப்பதாகச் சொல்கிறார்கள். தவெக பக்கம் போகலாம் என்று காங்கிரஸில் ஒரு தரப்பினர் சொல்வதைப் போலவே, ‘காங்கிரஸ் போனால் போகட்டுமே’ என மனநிலையில் திமுக-விலும் சிலர் இருக்கிறார்கள். ஆனால் 2 கட்சிகளிலுமே, ‘காரியம் கெட்டுவிடக் கூடாதே’ என்று துடிப்பவர்கள் தான் ‘இந்தக் கூட்டணி தொடர வேண்டுமே’ எனப் பதறுகிறார்கள். மதுரை திருநகரிலுள்ள முகாம் அலுவலகத்தில் செய்தியாளர்களிடம்

### தானாக வெளியேறுமா? கழுத்தை பிடித்து வெளியேற்றமா?!

அவர் கூறியதாவது-

நாடளுமன்றத்தில் ராகுல் காந்தி பேச, பாஜக அரசு தொடர்ந்து எதிர்ப்பு தெரிவிக்கிறது. ராகுல் காந்தி மட்டுமின்றி மொத்த எதிர்கட்சி உறுப்பினர்களையும் பேச அனுமதிக்கவில்லை. வேறு வழியின்றி நாடாளுமன்ற மைய மண்டபத்தில் போராடினோம்.



இதற்காக நான், மதுரை எம்பி சு. வெங்கடேசன் உட்பட 8 உறுப்பினர்கள் சஸ்பெண்ட் செய்யப்பட்டோம். எங்களது போராட்டம் அவைக்கு வெளியில் தொடர்கிறது. இது போன்ற செயலை மத்திய அரசு கைவிடவேண்டும். எதிர்க்கட்சிகளுக்கு உரிமை தரவேண்டும். எதிர்கட்சிகள் கேட்கும் கேள்விகளுக்க ஆளும்கட்சி பதிலளிக்க வேண்டும்.

திமுக கூட்டணியில் தொகுதிப் பங்கீடு குறித்து பேசுவதற்காக 5 பேர் கொண்டு காங்கிரஸ் குழு டிச.3-ல் அமைக்கப்பட்டது. திமுகவுக்காக 36 நாட்களாக காத்திருக்கிறோம். திமுக குழு அமைத்து அழைக்கும்போது பேசத் தயாராக உள்ளோம். நாங்கள் பொறுமையாக இருக்கிறோம். தோழமையை மதித்து காத்திருக்கிறோம். திமுகவுடன் கூட்டணி தொடர்கிறது. கூட்டணி வலுவாக இருக்கும் என, நம்புகிறோம். எங்களுக்கு உரிய மரியாதை தரவேண்டும்.

காங்கிரஸ் கட்சியின் தலைமை 39 முக்கிய தலைவர்களை அழைத்து தனித்தனி கருத்துக் கேட்டது. இதில் காங்கிரஸ் கட்சிக்கு மரியாதை மிக அவசியம் என்பதை தெளிவுபடுத்தினோம். இது குறித்து தகவல் உரியவர்களுக்கு தெரிவிக்கப்பட்டு இருக்கும். கட்சி தலைமை எடுக்கும் முடிவுகளுக்கு கட்டுப்பட்டு நடப்போம்.

மத்திய அமைச்சர் அமித் ஷா தலைமையிலான கூட்டணி சீமானுடன் போட்டி போடுகிறது. அதிமுக 3-வது இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளது. இதில் மோடியும் உள்ளார்.

மதுரை எய்ம்ஸ் கட்டுமான பணியை தொடர்ந்து கண்காணிகிறோம். கட்டிடம் முழுமையாக முடியாத நிலை உள்ளது. மதுரை எய்ம்ஸ் என்பது ராமநாதபுரத்தில் நடக்கக்கூடாது. மதுரையில் செயல்படவேண்டும். முழு கட்டுமானப் பணிகளும் முடிந்து திறக்க வேண்டும். மதுரை எய்ம்ஸை எப்போது திறக்க போக்கிறார் என, மோடி தமிழகம் வந்து சொல்லவேண்டும்.

அரசு வேலைக்கான போட்டி தேர்வு திடீரென ரத்து செய்யப்பட்டது கண்டித்தக்கது.

இவ்வாறு அவர் கூறினார்.

மதுரையில் காங்கிரஸ் மாநிலத் தலைவர் செல்வப்பெருந்தகை செய்தியாளர் சந்திப்பில் கூறியதாவது-

திமுக கூட்டணியில்தான் காங்கிரஸ் உள்ளது. திமுக உடன் எந்த கருத்து வேறுபாடோ, முரணோ இல்லை. கூட்டணி கட்சிகள் நினைப்பதை முதல் அமைச்சர் கொடுப்பார், அவர் யாரையும் விட்டுக்கொடுக்க மாட்டார். காங். மாவட்ட செயலாளர்கள் உங்கள் வேலையை மட்டும் பாருங்கள். கூட்டணி குறித்து மாநில தலைவர் நானே பேசுவதில்லை, அதை காங்கிரஸ் தலைமை தான் முடிவெடுக்கும்..கூட்டணிக்கு எதிராக பேசுபவர்களை காங். தலைமை பார்த்துக் கொள்ளும். தமிழ்நாட்டில் இந்தியா கூட்டணிக்கு முதல்அமைச்சர் மு.க. ஸ்டாலின் தான் தலைவர். தொகுதிப்பங்கீடு குறித்து பேச திமுக ஓரிரு நாளில் குழு அமைக்கும்.இவ்வாறு அவர் கூறினார்.

## போதையில் பேருந்தை இயக்கிய ஓட்டுநர்: தட்டி தூக்கிய உதவி ஆய்வாளர்: வாழ்த்திய பயணிகள்



நாகர்கோவில், பிப். 9–

குமரி மாவட்டத்தை விபத்தில்லாத மாவட்டமாக உருவாக்கவும், அனைவரும் போக்குவரத்து விதிகளை கடைபிடிக்க மாவட்ட காவல்துறை பல்வேறு விழிப்புணர்வுகளை ஏற்படுத்தி வருகிறது. இருந்தும் தொடர்ந்து போக்குவரத்து விதிமுறைகளை மீறுவோர் மீதும், மது போதையில் வாகனம் ஓட்டுவோர் மீதும், கடும் நடவடிக்கை எடுக்க மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஸ்டாலின் உத்தரவிட்டிருந்தார். எனவே நாகர்கோவில் போக்குவரத்து ஒழுங்குப் பிரிவு ஆய்வாளர் பேச்சுமுத்து தனது தலைமையிலான போக்குவரத்து ஒழுங்குப் பிரிவு உதவி ஆய்வாளர் சுமித் ஆல்ட்ரின் மற்றும் போக்குவரத்து ஒழுங்கு பிரிவு போலீசாரை தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டு போக்குவரத்து விதிமுறைகளை மீறுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டிருந்தார். எனவே உதவி ஆய்வாளர் மற்றும் காவலர்கள் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டு வந்தனர். அப்போது மார்த்தாண்டத்தில் இருந்து தனியார் பேருந்து ஒன்று சென்னைக்கு சென்று கொண்டிருந்தது.

இந்தப் பேருந்தில் மார்த்தாண்டம் மற்றும் நாகர்கோவிலில் இருந்து சுமார் 18–க்கும் மேற்பட்ட பயணிகள் இருந்தனர். பேருந்து நாகர்கோவில் அடுத்த ஒழுகினசேரி பகுதியில் வந்ததபோது அங்கு வாகன தணிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போலீசார் பேருந்தை நிறுத்தி சோதனை மேற்கொண்டதில் பேருந்து ஓட்டுனர் மது போதையில் இருந்ததை கண்டுபிடித்தனர்.

எனவே உதவி ஆய்வாளர் மது போதையில் இருந்த ஓட்டுநர் தொடர்ந்து சென்னையை நோக்கி பேருந்து ஓட்டுவது சரியில்லை, அது பயணிகளுக்கும் பாதுகாப்பானதாக இருக்காது என கூறி மாற்று ஓட்டுநர் வந்தால் மட்டுமே பயணிகளை தொடர்ந்து இந்த பேருந்தில் செல்ல அனுமதிப்பேன் அவர்களின் பாதுகாப்பு எங்களுக்கு மிகவும் முக்கியமானது என தெரிவித்தது மட்டுமல்லாமல், தனியார் பேருந்துகள் புறப்படுவதற்கு மூன்று மணி நேரத்திற்கு முன்பு அதன் ஓட்டுநர் மற்றும் உதவி ஓட்டுநர் ஆகியோர் மது போதையில் உள்ளனரா என பரிசோதித்து அதன் பின்னரே பேருந்தை இயக்க அவர்கள் பணியாற்றும் நிறுவனம் அனுமதிக்க வேண்டும். ஆனால் தனியார் பேருந்து நிறுவனங்கள் இதனை முற்றிலுமாக கடைபிடிக்காததின் விளைவுதான் ஓட்டுநர்கள் மதுபோதையில் இருப்பதற்கு காரணம் என தெரிவித்த அவர் போதை ஓட்டுனருக்கு ரூபாய் 15,000 அபராதம் விதித்தும், அவரின் ஓட்டுநர் உரிமத்தை இடைநிறுத்தம் செய்யவும் நடவடிக்கை மேற்கொண்டார். அதனைத் தொடர்ந்து போதை ஓட்டுனருக்கு பதிலாக வேறு ஓட்டுனரை வரவழைத்து பேருந்தை கொண்டு செல்லுமாறு கூறினார்.

ஆனால் மது போதையில் இருந்த ஓட்டுநர் மாற்று ஓட்டுனரை வரவழைக்காமல் காலம் தாழ்த்தி வந்தார் இதனால் சுமார் ஒரு மணி நேரத்திற்கு மேலாக பயணிகள் பேருந்திலேயே அமர்ந்து இருந்தனர்.

மேலும் ஓட்டுநர் மது அருந்தி பேருந்தை ஓட்டி வந்தார் என அறிந்த பயணிகள் ஓட்டுநருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டு வேறு ஓட்டுனர் வந்தால் தான் பேருந்தில் ஏறுவோம் என தெரிவித்ததால் அப்பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

வார விடுமுறை முடிந்து சென்னையை நோக்கி பயணிகளை ஏற்றி செல்லும் பேருந்து ஓட்டுநர்கள் மது போதையில் வாகனம் ஓட்டுகின்றனரா என போக்குவரத்து காவல்துறையினர் பேருந்து ஓட்டுநர்களை பிரீத் அனலைசர் மூலம் சோதனை செய்து மது போதையில் இருப்பதை கண்டுபிடித்து அவர் மீது நடவடிக்கை எடுத்து 18க்கும் மேற்பட்ட பயணிகளை பாதுகாத்த போக்குவரத்து உதவி ஆய்வாளர் சுமித் ஆல்ட்ரின் மற்றும் காவலர்களின் சிறப்பான பணி பயணிகளிடையே பெரும் வரவேற்பை பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

## அரசு ஊழியர்களும், ஆசியர்களும் திமுக அரசுக்கு பக்கபலமாக இருக்கவேண்டும்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள்!!



சென்னை, பிப்.09-

அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் திமுக அரசுக்கு பக்கபலமாக இருக்க வேண்டும் என முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள் விடுத்தார்.

சென்னை,அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதிய திட்டத்தை (TAPS) தமிழக அரசு அமல்படுத்தியுள்ளது. இந்த திட்டத்தின் மூலம் பழைய ஓய்வூதிய திட்டத்திற்கு நிகரான பலன்களை அரசு ஊழியர்கள் பெறுவார்கள். .இதையடுத்து, உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதிய திட்டத்தை அறிவித்த முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு ஜாக்டோ ஜியோ சார்பில் சென்னையில் பாராட்டு விழா நடைபெற்றது.இந்த விழாவில் பங்கேற்ற முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது, .அரசு ஊழியர்களின் வேர்வைத்துளிகள் மதிக்கப்பட வேண்டும், கண்ணீர் துளிகள் துடைக்கப் பட வேண்டும்.

ஆகையால் தான் உங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றியுள்ளோம். .மக்கள் பிரதிநிதிகளாக ஆட்சி வரக்கூடிய நாங்களும், அரசு ஊழியர்களாக மக்களுக்காக பணியாற்றும் நீங்களும் சேர்ந்துதான் அரசாங்கம்.ஒரு நாணயத்தில் இரு பக்கங்களாக இருக்கக்கூடிய அமைச்சரவையும், அரசு ஊழியர்களும் ஒருசேர பார்ப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். .அரசு ஊழியர்களின் அரசாக திராவிட மாடல் திமுக அரசு உள்ளது. கருணாநிதி ஆட்சி காலம் அரசு ஊழியர்கள், ஆசிரியர்களின் பொற்காலம்.திமுக அரசில் நாட்டிற்கே முன்னோடியான முத்திரைத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறோம். கலைஞர் மகளிர் உரிமை திட்டம், மகளிர் விடியல் பயணம், புதுமைப்பெண், இல்லம் தேடி கல்வி என பல்வேறு திட்டங்களால் திமுக அரசுக்கு நற்பெயரும் செல்வாக்கும் கிடைத்ததற்கு அந்த பெருமையில் பெரும் பங்கு அரசு ஊழியர்களையே சாரும். அந்த நன்றியை கூறும் வாய்ப்பாக இந்த மாநாட்டிற்கு நான் வந்துள்ளேன்.

அனைத்து அரசு ஊழியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் நான் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். அரசின் கண்களாக, கரங்களாக அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றனர். .பழைய ஓய்வூதியத் திட்டம் பறிபோக அதிமுக அரசுதான் காரணம். வேர்வைத்துளி சிந்தி உழைத்தவர்களுக்கு ரத்தக்கண்ணீர் வர வைத்ததுதான் அதிமுக ஆட்சி. .தமிழ்நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதிய திட்டத்தின் கீழ் அரசு ஊழியர்களுக்கான சிறபு கருணை ஓய்வூதியம், உழைப்புக்கான உரிமைத்தொகை என்ற பெயரில் வழங்கப்படும்.அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் எங்களுக்கு (திமுக அரசுக்கு) பக்கபலமாக இருங்கள், நாங்கள் உங்களுக்கு பக்கபலமாக இருக்கிறோம்இவ்வாறு அவர் கூறினார்

## குரூப் 2, குரூப் 2ஏ தேர்வுகள் ரத்து : டிஎன்பிஎஸ்சி அதிகாரி மாற்றம்!

சென்னை, பிப்.09–

சென்னையில் ஞாயிற்றுக்கிழமை (பிப்.8) ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் (குரூப்2, 2ஏ பணிகள்) பிரதான தேர்வுகள் முற்பகல் மற்றும் பிற்பகல் நடைபெறவிருந்த நிலையில், எழுத்துத் தேஅவுகள் தொழில்நுட்ப கோளாறு காரணமாக சென்னையில் 3 மையங்களில் நடைபெறவில்லை.

இதையடுத்து, தேர்வர்கள் நலனைக் கருத்தில் கொண்டு ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருந்த 2 தேர்வுகளும் சென்னை உள்பட தமிழகம் முழுவதும் ரத்து செய்யப்பட்டு, பின்னர் வேறு தேதியில் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது. இதுகுறித்து தேர்வகள் அனைவருக்கும், மறுதேர்வு நடைபெறும் நாளுக்கு 15 நாள்களுக்கு முன்பாக தேர்வு மையங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டு தேர்வுக்கூட நுழைவுச் சீட்டு விவரம் குறுஞ்செய்தி, மின்னஞ்சல் வாயிலாக தகவல் அளிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

வருகிற பிப். 22–ஆம் தேதி நடைபெறவுள்ள ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு (குரூப்–2) பொது அறிவு தேர்வு (தாள்–2) வழக்கம்போல் அன்றைய நாளே நடத்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது. இதுதொடர்பாக தேர்வர்களுக்கு மீண்டும் சரிபார்த்து தேர்வுக்கூட நுழைவுச் சீட்டு பிப். 13–ஆம் தேதி வழங்கப்படும் என தேர்வாணையம் விளக்கம் அளித்திருந்தது.

தமிழகம் முழுவதும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருந்த குரூப்2, 2 ஏ பிரதான தேர்வுகள் ரத்து செய்யப்பட்டதற்கு அரசியல் கட்சி தலைவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.இந்த நிலையில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய தேர்வு கட்டுப்பாட்டு அலுவலர் சண்முகசுந்தரம் மாற்றப்பட்டுள்ளார். அந்த பதவிக்கு வெங்கடபிரியா ஐஏஎஸ் நியமிக்கப் பட்டுள்ளார்.



கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் மூக்கண்டப்பள்ளி ஹோட்டல் ஹில்ஸ் கூட்டரங்கில், தமிழ்நாடு மாநில ஊரக / நகர்புற வாழ்வாதார இயக்கம் சார்பாக, கிருஷ்ணகிரி, தருமபுரி, சேலம், நாமக்கல், திருப்பத்தூர், ராணிப்பேட்டை ஆகிய மாவட்ட மகளிர் சுய உதவிக்குழு உற்பத்தி பொருட்களுக்கான வணிக சந்திப்பை மாவட்ட ஆட்சித்தலைவர் .ச.தினேஷ் குமார் ,துவக்கி வைத்து மகளிர் சுய உதவிக்குழுவினர்– சிறு,குறு தொழில் நிறுவனங்களிடையேயான புரிந்துணர்வு ஒப்பந்த ஆணைகளை வழங்கினார். உடன் ஒசூர் மாநகராட்சி மேயர் .எஸ்.ஏ.சத்யா, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்க திட்ட இயக்குநர் .பி.பெரியசாமி உள்ளிட்ட பலர் உள்ளனர்.

# கதை நன்றாக இருந்தால் நிச்சயம் படம் வெற்றி பெறும் நடிகர்கள் கோப்ரா பிரதீப் குமார், மகாவிஷ்ணு பேட்டி !



கோவை, பிப்.09-

கோவை காளப்பட்டி சாலையில் உள்ள ஒரு தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்ற திருமணவிழாவில் சிறப்பு விருந்தினர்களாக வருகை தந்த நடிகர்கள் கோப்ரா பிரதீப் குமார் மற்றும் மகாவிஷ்ணு ஆகிய பத்திரிகையாளர்களை சந்தித்தனர்.

அப்போது அவர்கள் பேசும்போது, தற்சமயம் அனைத்து பட்ஜெட் படங்களுக்கும் தியேட்டர்கள் கிடைத்து வருவதாகவும்,சிறிய படம் பெரிய படம் என்று இல்லாமல் கதை நன்றாக இருந்தால் நிச்சயம் படம் வெற்றி பெறுவதாகும்,ஒரு படம் வெற்றி பெறுவதற்கு கதாநாயகர்கள் தேவையில்லை, நல்ல கதைகள் இருந்தால் நிச்சயம் அந்த படம் வெற்றி பெறும் என்றும் தெரிவித்தனர். மேலும் தாங்கள் இருவரும் இணைந்து தற்சமயம் விஜய் ஆண்டனி படத்தில் நடித்து வருவதாகவும், கோவை மண்ணின் மைந்தர்கள் என்பதில் பெருமை கொள்வதாகவும் தெரிவித்தனர்.

# விளாத்திகுளத்தில் பாரதிய ஜனதா கட்சி மற்றும் தேசிய ஜனநாயக கூட்டணி நிர்வாகிகள் கலந்தாய்வு கூட்டம்



விளாத்திகுளம், பிப்ரவரி.09-

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் தனியார் திருமண மண்டபத்தில் வடக்கு ஒன்றியம் பாரதிய ஜனதா கட்சி மற்றும் தேசிய ஜனநாயக கூட்டணி நிர்வாகிகள் சந்திப்பு கூட்டம் ஒன்றிய தலைவர் காட்டு ராஜா தலைமையில் நடைபெற்றது இதில் விளாத்திகுளம் சட்டமன்ற தொகுதிக்கான பாரதிய ஜனதா கட்சியின் பார்வையாளர் மாநில பொதுச் செயலாளர் ராம சீனிவாசன் கலந்துகொண்டு உரையாற்றினார்.

இந்த கலந்தாய்வு கூட்டத்தில் தூத்துக்குடி வடக்கு மாவட்ட பாஜக தலைவர் சரவணன் கிருஷ்ணன், பொதுச் செயலாளர் சேதுராஜ், மாநில செயற்குழு உறுப்பினர் ராமமூர்த்தி, ஒன்றிய பிரதிநிதி கனகவேல்ராஜ் , அதிமுக முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சின்னப்பன் மற்றும் அமமுக மாநில மகளிர் அணி துணைத் தலைவர் செல்வி நேதாஜி, அதிமுக ஒன்றிய செயலாளர்கள், தேசிய ஜனநாயக கட்சி கூட்டணி நிர்வாகிகள் என பலர் கலந்து கொண்டனர்.

# ராமநாதபுரம் செய்யது அம்மாள் கலை, அறிவியல் கல்லூரி 13 வது பட்டமளிப்பு விழா

## அழகப்பா பல்கலைக்கழகம் தேர்வு கட்டுப்பாட்டாளர் ஜோதி பாசு பங்கேற்பு



ராமநாதபுரம், பிப்.09-

ராமநாதபுரம் செய்யது அம்மாள் கலை, அறிவியல் கல்லூரி 13 வது பட்டமளிப்பு விழா டாக்டர் இ.எம்.அப்துல்லா கலையரங்கில் நடந்தது.

செய்யது அம்மாள் அறக்கட்டளை தலைவர் டாக்டர் பாபு அப்துல்லா, செய்யது அம்மாள் கலை, அறிவியல் கல்லூரி தாளாளர் சின்னதுரை அப்துல்லா முன்னிலை வகித்தனர். இதில் 2022 - 2025 கல்வி ஆண்டுகளில் காரைக்குடி அழகப்பா பல்கலை., அளவில் பல்வேறு பாடப்பிரிவுகளில் தங்கப் பதக்கம் பெற்ற இளமறிவியல் மாணவர் ஒருவர் உள்பட 4 மாணவியர், பல்கலை அளவில் 1 முதல் 10 இடம் பிடித்த 25 மாணவியர் உள்பட 658 பேருக்கு இளங்கலை பட்டம், பட்ட மேற்படிப்புகளில் பல்கலை அளவில் தங்கப்பதக்கம் பெற்ற 1 முதுகலை மாணவி, முதல் 10 இடம் பிடித்த 1 மாணவர், 18 மாணவியர் உள்பட 105 பேருக்கு காரைக்குடி அழகப்பா பல்கலை தேர்வு கட்டுப்பாட்டாளர் முனைவர் ஜோதி பாசு முதுகலை பட்டம் வழங்கினார். இதில் செய்யது அம்மாள் அறக்கட்டளை கவுரவ உறுப்பினர்கள் டாக்டர் செய்யதா அப்துல்லா, டாக்டர் சின்னதுரை அப்துல்லா, ராஜாத்தி அப்துல்லா கலந்து கொண்டனர்.

உங்கள் அபிமான
தின தமிழ்
செய்திகளை
Whatsapp - ல்
பின் தொடர

# திருப்பூர் கலிமுல்லாவுக்கு மதநல்லிணத்திற்கான கோட்டை அமீர் விருது !



திருப்பூர், பிப்ரவரி.09-

திருப்பூரை சார்ந்த சகோதரர் கலிமுல்லாவுக்கு மத நல்லிணக்க கோட்டை அமீர் விருது வழங்கி கெளரவப்படுத்திய தமிழ்நாடு முதலமைச்சர் மு .க. ஸ்டாலினுக்கு பல் சமய நட்புறவு கழகத்தின் சார்பாக அலுவலகத்தில் நேரில் சந்தித்து வாழ்த்து தெரிவித்தனர்.

மாவட்ட கழக பேச்சாளர் கருப்புசாமி பாண்டி மற்றும் மாநகர பொருளாளர் சேட் பொன்னாடை அணிவித்து கெளரவப்படுத்தினர். மற்றும் தலைவர் ஜே .ஷாஜகான் மாவட்ட இளைஞரணி தலைவர் கே .உசேன் மக்கள் நீதி மையம் கட்சியின் தெற்கு மாவட்ட செயலாளர் பாபு ( எ) பக்கீர் முகமது.தக்னிஜமாத் நிறுவனத் தலைவர் டாலர் சிட்டி ரபீக் ஆகியோர் உடன் இருந்தனர்.

# விருதுநகர் மாவட்ட பட்டதாரிகள் வட்டார ஒருங்கிணைப்பாளர் பதவிக்கு விண்ணப்பிக்கலாம் !

விருதுநகர், பிப்.09-

விருதுநகர் மாவட்டத்தில் வட்டார ஒருங்கிணைப்பாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன என மாவட்ட ஆட்சியர் மரு.என்.ஓ.சுகபுத்ரா கூறினார்.

விருதுநகர் மாவட்டம், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின்கீழ் வாழ்வாதார நடவடிக்கைகளை மேற்கொள்ள விருதுநகர், சிவகாசி, இராஜபாளையம், திருவில்லிபுத்தூர், அருப்புக்கோட்டை, திருச்சுழி, நரிக்குடி, சாத்தூர், வெம்பக்கோட்டை, வத்திராயிருப்பு மற்றும் காரியாபட்டி ஆகிய 11 வட்டாரங்களில் காலியாக உள்ள 23 வட்டார ஒருங்கிணைப்பாளர் பணியிடம் பூர்த்தி செய்யப்பட உள்ளது.

பணியிடமானது எழுத்து தேர்வு மற்றும் நேர்முகத் தேர்வின் அடிப்படையில் நிரப்பட உள்ளன.

வட்டார ஒருங்கிணைப்பாளர் பதவிக்கான தகுதிகள்:

1)ஏதேனும் ஒரு பட்டப்படிப்பில் தேர்ச்சி மற்றும் MS Office-ல் குறைந்தது 03 மாத சான்றிதழ் வகுப்பு (Certificate Course) சான்றிதழ் பெற்றவராக இருத்தல் வேண்டும்.

2) 30 வயதிற்குள் மிகாமல் இருக்கவேண்டும்.

3) தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் SHG/PLF போன்றவற்றில் குறைந்தது 05 ஆண்டுகள் பணியாற்றிய அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

4) வட்டார ஒருங்கிணைப்பாளர் பணியிடத்திற்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர் விண்ணப்பிக்கும் பணியிடமுள்ள வட்டாரத்தின் எல்கை பகுதிக்குள் வசிப்பவராக இரு வேண்டும். (Residence in same block)

5) இரு சக்கர வாகனம் ஓட்டுநர் உரிமம் பெற்றிருத்தல் வேண்டும். இருசக்கர வாகனம் நன்றாக இயக்க தெரிந்தவராக இருத்தல் வேண்டும்.

6) சிறந்த நன்னடத்தையுடன் இருக்க வேண்டும்.

7) தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்க திட்டம்/புதுவாழ்வு திட்டம்/மிதிகிஞி திட்டம் போன்றவற்றின்கீழ் பணிபுரிந்து நிரந்தர பணிநீக்கம்/தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டவராக இருக்கக் கூடாது.

விண்ணப்ப படிவம் இணையதள முகவரி www.virudhunagar.nic.in இல் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

1)விண்ணப்பதாரர்கள் பிறந்த தேதி, பணிபுரிந்ததற்கான பணிஅனுபவச் சான்று, கல்வித் தகுதி, சாதிச் சான்று ஆகியவைகளுக்கு ஒளிநகல் (Xerox Copy) கண்டிப்பாக இணைக்கப்பட வேண்டும்.

2) விண்ணப்ப படிவத்தில் உள்ள விபரங்கள் முழுமையாக பூர்த்தி செய்து அனுப்பப்பட வேண்டும். முழுமையாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

3) தகுதியில்லாத மற்றும் காலங்கடந்து பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

மேலும் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் உரிய சான்றுகளின் நகல்களுடன் இணை இயக்குநர்/ திட்ட இயக்குநர், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், மாவட்ட இயக்க மேலாண்மை அலகு, அலுவலக வேலை நாட்களில், காலை 10.00 மணி முதல் மாலை 5.45 மணி வரை நேரிலோ அல்லது இணை இயக்குநர், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், மாவட்ட இயக்க மேலாண்மை அலகு, ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி துறை அலுவலக வளாகம், விருதுநகர், அஞ்சல் - 626 002, விருதுநகர் மாவட்டம் என்ற முகவரிக்கு பதிவஞ்சல் மூலமாகவோ 16.02.2026 (திங்கட்கிழமை) பிற்பகல் 5.45 மணிக்குள் கிடைக்குமாறு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர் மரு.என்.ஓ.சுகபுத்ரா, தெரிவித்துள்ளார்.

### ஆவடி, பூவிருந்தவல்லி, மதுரவாயல் சட்டமன்ற தொகுதிகளுக்குட்பட்ட

# 382 பயனாளிகளுக்கு பட்டாக்கள் அமைச்சர் நாசர் வழங்கினார் !



திருவள்ளூர், பிப்.09-

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் சா.மு.நாசர், மாவட்ட ஆட்சித் தலைவர் மு.பிரதாப் தலைமையில் பயனாளிகளுக்கு வீட்டுமனை பட்டாக்களை வழங்கினார்.

திருவள்ளூர் மாவட்டம், பூவிருந்தவல்லி வட்டம் காட்டுப்பாக்கம் எல்.சி.வி.கே.எஸ் உயர்நிலைப்பள்ளியில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில் பூவிருந்தவல்லி மற்றும் மதுரவாயில் சட்டமன்ற தொகுதிகுட்பட்ட 305 பயனாளிகளுக்கும், திருவேற்காடு நகராட்சி தனியார் திருமண மண்டபத்தில் ஆவடி சட்டமன்ற தொகுதிகுட்பட்ட 77 பயனாளிகளுக்கும் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் சா.மு.நாசர், மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.மு.பிரதாப் தலைமையில் வீட்டுமனை பட்டாக்களை வழங்கினார்.

சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் கூறியதாவது,

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணைகிணங்க தமிழ்நாட்டில் 22 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. திருவள்ளூர் மாவட்டத்தில் தற்போது வரை 1.40 இலட்சம் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளது. ஆவடி, பூவிருந்தவல்லி மற்றும் மதுரவாயல் ஆகிய சட்டமன்ற தொகுதிகளுக்குட்பட்ட 382 பயனாளிகளுக்கு பட்டாக்கள் வழங்கப்படுகிறது. ஆவடி, பூவிருந்தவல்லி மற்றும் மதுரவாயல் ஆகிய சட்டமன்ற தொகுதிகளுக்குட்பட்ட அகரமேல் ,அடையாளம்பட்டு ,அயனம்பாக்கம், உடையவர்கோயில், கண்ணப்பாளையம், காட்டுப்பாக்கம், கொரட்டூர் , கோளப்பன்சேரி,

சுந்தரசோழவரம், சென்னீர்குப்பம், சோராஞ்சேரி , திருவேற்காடு, நசரத்பேட்டை, பர்வதராஜபுரம், பாரிவாக்கம், பிடாரிதாங்கல், மேப்பூர், மேல்பாக்கம், வயலாநல்லூர் திருமணம், வயலாநல்லூர் , வயலாநல்லூர் காவல்சேரி, வீரராகவபுரம், செம்பரம்பாக்கம் (மேவளூர்குப்பம் ஆ) ஆகிய 23 கிராமங்களை சேர்ந்த 382 பயனாளிகளுக்கு பட்டாக்கள் வழங்கப்படுகிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் விடியல் பயணம் திட்டம்,மகளிர் உரிமைத் தொகை, புதுமைப் பெண் திட்டம், தமிழ் புதல்வன், மக்களை தேடி மருத்துவம், நான் முதல்வன் போன்ற பல்வேறு மகாத்தன திட்டங்களை வழங்கி மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தி வருகிறார் எனவே பட்டாங்களை பெற்ற அனைத்து பயனாளிகளுக்கும் என வாழ்த்துளையும் பாராட்டுகளையும் தெரிவித்து கொள்கிறேன் என சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் சா.மு.நாசர் கூறினார்.

இந்நிகழ்ச்சிகளில், பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினர்ஆ.கிருஷ்ணசாமி, மாவட்ட வருவாய் அலுவலர் ச.சுரேஷ், திருவேற்காடு நகர்மன்ற தலைவர் திரு.என்.கே.மூர்த்தி, திருவள்ளூர் வருவாய் கோட்டாட்சியர் சு.ரவிசந்திரன், திருவேற்காடு நகராட்சி ஆணையர் ராமர். பூவிருந்தவல்லி வட்டாட்சியர் உதயம் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்.

# கோவை ரத்தினபுரி பகுதியில் நலம் காக்கும் ஸ்டாலின் மருத்துவ முகாம்



**கோவை, பிப்.09–**

**கோவை மாவட்டம் ரத்தினபுரி 46 வது வார்டில் உள்ள மாநகராட்சி மேல்நிலைப் பள்ளியில் நலம் காக்கும் ஸ்டாலின் மருத்துவ முகாம் மத்திய மண்டல தலைவர் மீனா லோகு குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தார்.மாநகராட்சி ஆணையாளர் சிவகுரு பிரபாகரன் முகாமை பார்வையிட்டார்.**

**முகாமில் 25 கும் மேற்பட்ட கர்ப்பிணி பெண்களுக்கு ஊட்டச்சத்து உபகரணங்கள்,முதியவர்களுக்கு மருந்து பெட்டகங்கள் வழங்கப்பட்டன.இந்த மருத்துவ முகாமில் அனைத்து மருத்துவ சிகிச்சைகள் இடம்பெற்றன.இதில் சிறப்பு பரிசோதனைகளாக ரத்தப் பரிசோதனை,ணிசிநி/ணிசிபிளி, ஸ்கேன்,புற்றுநோய் பரிசோதனைகள் இடம்பெற்றன.உடன் மத்திய மண்டல உதவி ஆணையாளர், மாநகராட்சி சுகாதார அலுவலர்,மாமன்ற உறுப்பினர் வைர முருகன்,ஆறுமுகம் 46 வது வட்டக் கழக செயலாளர் ஆறுமுகம் இருந்தனர்.பொதுமக்கள் தங்களுக்கு தேவையான சிகிச்சை பெற்றுச் சென்றனர்.**

# வேலூர் அணைக்கட்டு வட்டம் கீழ்கொத்தூரில் காளை விடும் திருவிழா



வேலூர் பிப்.09-

வேலூர் மாவட்டம், அணைக்கட்டு வட்டம் கீழ்கொத்தூர் ஊராட்சியில் மாபெரும் காளை விடும் திருவிழா நடைபெற்றது.

வேலூர் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் திருப்பத்தூர் திருவண்ணாமலை மற்றும் சித்தூர் உள்ளிட்ட பல்வேறு பகுதியில் இருந்து சுமார் 200க்கும் மேற்பட்ட காளைகள் பங்கேற்றன. சிறப்பு விருந்தினர்களாக அணைக்கட்டு எம்எல்ஏ பி.நந்தகுமார், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் மு.பாபு வருகை தந்து வாழ்த்துக்களை தெரிவித்து அனைவரையும் உற்சாகமூட்டினர். இளைஞர்கள் ஏராளமானோர் காளை விடும் திருவிழாவை காணக் குவிந்திருந்தனர்.

குறைந்த நேரத்தில் குறிப்பிட்ட இலக்கினை கடக்கும் காளைகளுக்கு முதல் பரிசாக ராயல் என்பீல்டும், இரண்டாம் பரிசாக பஜாஜ் பல்சரும், மூன்றாம் பரிசாக ஹீரோ ஸ்பிளண்டர், நான்காம் பரிசாக ஹீரோ பிளஷ்ஷர், ஐந்தாம் பரிசாக ஹீரோ எச்எப் டீலக்ஸ் ஆகிய இருசக்கர வாகனங்கள் மற்றும் பரிசுத்தொகைகள் உள்ளிட்ட மொத்தம் 60 பரிசுகள் வழங்கப்பட்டன.

முதலாவதாக போட்டி துவக்கத்தில் உறுதிமொழியேற்றனர். போட்டியில் கலந்து கொண்ட அனைத்து காளைகளையும் கால்நடை மருத்துவர்கள் பரிசோதனை செய்த பிறகு அனுமதிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் காளை விடும் குழு நிர்வாகிகள் ஒன்றிய கவுன்சிலர் கே.எஸ்.கணபதி, ஊராட்சி மன்ற தலைவர் கே.எஸ்.உதயகுமார், கே.கே.ஸ்ரீதர், கே.எஸ்.குணசேகரன், தசரதன் மற்றும் ஊராட்சி மன்ற துணைத்தலைவர் சிவகாமிகுமார் மற்றும் இளைஞர் அணியினர் அனைத்து ஏற்பாடுகளையும் செய்திருந்தனர்.

# மதுரை தனிஷ்க்கில் 'சிறந்த தங்க விலை' மற்றும் 'தங்கத்தை மாற்றி வைரத்தைப் பெறுவது' ஆகிய திட்டங்கள் அறிமுகம்!




மதுரை, பிப்ரவரி 09-

மதுரை தனிஷ்க் இரண்டு புதிய பண்டிகைக்கால சலுகைகளுடன் 'தங்கத்தை பரிமாற்றம் செய்யும் திட்டம் நீட்டிப்பு முன்கூட்டியே தங்கம் வாங்குவோருக்கு 'சிறந்த தங்க விலை' மற்றும் 'தங்கத்தை மாற்றி வைரத்தைப் பெறுவது' ஆகிய திட்டங்கள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

மதுரை அண்ணாநகர் தனிஷ்க் டைமண்ட் - ஜூவல்லரி ஷோரூமில் நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பின் போது இது தொடர்பாக நிறுவனத்தின் சார்பில் தெரிவிக்கையில்

இந்தியா முழுவதும் மக்களின் ஆழமான நம்பிக்கையைப் பெற்ற டாடா குழுமத்தின் நகை பிராண்டான தனிஷ்க், சச்சின் டெண்டுல்கரின் ஆதரவு பெற்ற நாடு தழுவிய திட்டமான 'தங்கத்தை மாற்றும் திட்டத்தை' நீடித்திருக்கிறது. இந்தியக் குடும்பங்கள் தங்கத்தை எளிதாக மாற்றவும், புத்திசாலித்தனமாக வாங்கவும் உதவும் வகையில் இரண்டு புதிய சலுகைகளை அறிமுகப்படுத்தியுள்ளது.

ஏற்கனவே நடைமுறையில் உள்ள, பழைய தங்கத்தை மாற்றும் போது எந்தக் கழிவும் இல்லாத (0% திட்டத்துடன் சேர்த்து, தற்போது பின்வரும் இரண்டு புதிய சலுகைகளை தனிஷ்க் அறிமுகம் செய்திருக்கிறது மேலும் தங்கத்திற்கு முன்கூட்டியே பணம் செலுத்தி வாங்குவோருக்கு சிறந்த தங்க விலை பிஜிஆர் தங்கத்திற்குப் பதில் வைரத்தை மாற்றிக்கொள்ளும் வசதி தங்களிடம் இருக்கும் தங்கத்தின் மதிப்பை வெளிக்கொணர்ந்து, பயனடைவதற்கு இந்த கூடுதல் சலுகைகள் வாடிக்கையாளர்களுக்கு அதிக வழிமுறைகளை வழங்குகின்றன. தங்க இறக்குமதி மீது நம் நாடு சார்ந்திருப்பதை குறைப்பதற்கு இது உதவுவதோடு, அதிக தெளிவுடன் ஆபரணங்களை வாங்குவதை வாடிக்கையாளர்கள் திட்டமிடுவதற்கும் இது உதவுகிறது. என்றும் மேலும் இந்திய குடும்பங்களில் மட்டும் சுமார் 25,000 டன் எடையுள்ள தங்கம் இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது, அதேசமயம் ஒவ்வொரு ஆண்டும் நம் நாட்டின் தங்கத்திற்கான தேவையில், 99 சதவீதம் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி மூலமே பூர்த்தி செய்யப்படுகிறது. மக்கள் தங்கள் வீட்டில் வெறுமனே வைக்கப்பட்டிருக்கும் பழைய தங்கத்தை புழக்கத்திற்குக் கொண்டு வந்து, புதிய நகைகளாக மாற்றிக் கொள்வதை ஊக்குவிப்பதன் மூலம், நம் நாடு இறக்குமதி செய்யும் தங்கத்தின் அளவைக் குறைக்கவும், அந்நியச் செலாவணியை மிச்சப்படுத்தவும் தனிஷ்க் உதவுகிறது. என்று தெரிவித்துள்ளனர்.

# சிவகங்கையில் வாக்காளர் பதிவு அலுவலர்களுடன் மாவட்ட வாக்காளர் பட்டியல் பார்வையாளர் ஆலோசனை



சிவகங்கை, பிப்.09-

சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் சிவகங்கை மாவட்ட வாக்காளர் பட்டியல் பார்வையாளர் / தேசிய சுகாதார இயக்கத்தின் குழும இயக்குநர் டாக்டர் அ.அருண் தம்புராஜ், மாவட்ட தேர்தல் அலுவலர், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி, தலைமையில் அனைத்து வாக்காளர் பதிவு அலுவலர்கள் மற்றும் உதவி வாக்காளர் பதிவு அலுவலர்கள் ஆகியோர்களுடன் கலந்தாய்வு கூட்டம் மேற்கொண்டார் .

சிவகங்கை மாவட்டத்திற்கு வாக்காளர் பட்டியல் பார்வையாளராக நியமனம் செய்யப்பட்டுள்ள தேசிய சுகாதார இயக்கத்தின் குழும இயக்குநர் டாக்டர் அ.அருண் தம்புராஜ் இந்தியத் தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதல்களின்படி 01.01.2026-யை தகுதிநாளாகக் கொண்டு, 04.11.2025 முதல் வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிர திருத்தம் நடைபெற்று வருகின்ற 17.02.2026 அன்று வாக்காளர் இறுதிப்பட்டியல் வெளியிடப்பட உள்ள நிலையில், சிவகங்கை மாவட்டத்திற்கு இரண்டாம் முறையாக வருகைதந்து, வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், பெயர் நீக்குதல்

மற்றும் திருத்தம் உள்ளிட்ட இனங்கள் தொடர்பாக மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் களஆய்வுகள் மேற்கொண்டார்.

மேலும் சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அனைத்து வாக்காளர் பதிவு அலுவலர்கள் மற்றும் உதவி வாக்காளர் பதிவு அலுவலர்கள் ஆகியோர்களுடன் ஆய்வுக்கூட்டம் மேற்கொண்டு, வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிரத் திருத்தப் பணிகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் குறித்தும் உரிய அறிவுரைகள் வழங்கினார். மேலும், மாவட்டத்திலுள்ள வாக்குச்சாவடி நிலையங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய அடிப்படை வசதிகள் குறித்தும், இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடும் முன்பாக மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் குறித்தும், சிவகங்கை மாவட்ட வாக்காளர் பட்டியல் பார்வையாளர் / தேசிய சுகாதார இயக்கத்தின் குழும இயக்குநர் டாக்டர் அ.அருண் தம்புராஜ், இ.ஆ.ப., அவர்கள், வாக்காளர் பதிவு அலுவலர்கள் மற்றும் உதவி வாக்காளர் பதிவு அலுவலர்கள் ஆகியோர்களுக்கு அறிவுரைகள் வழங்கினார்.

இந்நிகழ்வின் போது, மாவட்ட வருவாய் அலுவலர் மரு.எஸ்.செல்வசுரபி, சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் செல்வி தே.ஜெ◌ஃபி கிரேசியா (186 - சிவகங்கை சட்டமன்ற தொகுதி),மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் ஐ.சையது முகைதீன் இப்ராகிம் (187 - மானாமதுரை (தனி) சட்டமன்ற தொகுதி), அனைத்து உதவி வாக்காளர் பதிவு அலுவலர்கள், தேர்தல் வட்டாட்சியர் மேசியா தாஸ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

தின தமிழ் நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள் !




# கட்டுமானத் தொழிலாளர்களின், குழந்தைகளுக்கு இணைய வழி திறன் மேம்பாட்டு பயிற்சிகள் !

சிவகங்கை, பிப்.09-

சிவகங்கை மாவட்டம் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நலவாரியத்தில் பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளர்களின், உயர்கல்வி பயிலும் குழந்தைகளுக்கு இணைய வழி திறன் மேம்பாட்டு பயிற்சிகள் வழங்கப்படவுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி கூறினார்.

இது குறித்து அவர் கூறியிருப்பதாவது-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால், 2025 ஆம் ஆண்டு சுதந்திர தின உரையில், கட்டுமானத் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு இணையவழி திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டதைத்தொடர்ந்து, அரசாணை (நிலை) எண்.119, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் (ஐ2) துறை, நாள்.13.10.2025-ன்படி, தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நலவாரியத்தில், பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளர்களின், உயர்கல்வி பயிலும் குழந்தைகளுக்கு (பொறியியல், கலை மற்றும் அறிவியல் - இளங்கலை, முதுகலை) இணையவழி திறன் மேம்பாட்டு பயிற்சிக்கு வழங்குவதற்கு ஆணையிடப்பட்டுள்ளது. அதன்படி, தமிழ்நாடு முழுவதும் 40 பயிற்சி பிரிவுகளில் 10 ஆயிரம் மாணவ, மாணவிகளுக்கு இணைய வழியில் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளது. இம்மேம்பாட்டு பயிற்சியினை பெற விரும்பும் மாணவ, மாணவிகள், பதிவு செய்யப்பட்ட கட்டுமானத் தொழிலாளர்களின் குழந்தைகளாக இருத்தல் வேண்டும். உயர்கல்வி முதலாமாண்டு முதல் இறுதியாண்டு வரை (பொறியியல் மற்றும் கலை மற்றும் அறிவியல் - இளங்கலை முதுகலை பயில்வோர் மட்டும்) உயர்கல்வி பயின்று வரும் மாணாக்கர்கள் மட்டுமே இப்பயிற்சியினை பெற விண்ணப்பிக்கலாம்.

தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நலவாரியத்தில் இருந்து நிதியுதவி பணப்பலன் பெற்றிருத்தலோ அல்லது நிதியுதவி கோரி விண்ணப்பித்து இருத்தலோ வேண்டும். கட்டுமானத் தொழிலாளர் நலவாரியத்தில் பதிவு செய்யப்பட்ட தொழிலாளர்களின் குடும்பத்தில், இரண்டு குழந்தைகள் மட்டுமே இப்பயிற்சி பெற இயலும். மேலும், ஒரு குழந்தை ஒரு பயிற்சி பிரிவில் பங்கேற்பின், மூன்று ஆண்டுகளுக்கு பிறகே, மீண்டும் மற்றொரு பயிற்சியில் பங்கேற்க இயலும். திறன் மேம்பாட்டு பயிற்சியில் கலந்து கொள்பவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளது. எனவே, பயிற்சியில் கலந்து கொள்ள விரும்பும் உயர்கல்வி உதவித்தொகை பெற்ற குழந்தைகள் விண்ணப்பத்தினை பூர்த்தி செய்து,

http://application.tnbocw.com என்ற இணையதளத்தில் பதிவேற்றம் செய்தோ அல்லது தொழிலாளர் உதவி ஆணையர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) அலுவலகத்தில் நேரிலோ சமர்ப்பித்து பயன்பெறலாம். கூடுதல் விபரங்களுக்கு 8001858687 என்ற அலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டு விபரங்கள் பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி தெரிவித்துள்ளார்.



ஈரோடு மாவட்டம் நம்பியூர் சாவக்காட்டு பாளையத்தில் உங்க கனவ சொல்லுங்க விண்ணப்ப படிவம் பொது மக்களுக்கு வழங்கப்படுவதை ஈரோடு மாவட்ட ஆட்சியர் கந்தசாமி பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

# பிரதமர் மோடி பிறந்தநாளையொட்டி கொத்தங்குளத்தில் மஞ்சுவிரட்டு போட்டி



கடலாடி, பிப்.09-

இராமநாதபுரம் மாவட்டம் கடலாடி வட்டம் பாஜக கிழக்கு ஒன்றியம் சார்பில் கொத்தங்குளம் கிராமத்தில் பாரதப் பிரதமர் நரேந்திர மோடியின் பிறந்தநாளை முன்னிட்டு வடமாடு மஞ்சுவிரட்டு போட்டியானது பாஜக கிழக்கு ஒன்றிய செயலாளர் ஸ்டாலின் தலைமையிலும் முன்னாள் மாநில பொதுக்குழு உறுப்பினர் எம் பி ராணுவப் பிரிவு மாவட்டத் தலைவர் மேகசெல்வம் முன்னிலையிலும் நடைபெற்றது.

இதில் 50 க்கும் மேற்பட்ட காளைகள் போட்டியில் களத்தில் கட்டவிழ்க்கப்பட்டு, சீறிப்பாய்ந்து பார்வையாளர்களை மெய் சிலிர்க்க வைத்தது இதனை உற்சாகத்துடன் மாடுபிடி வீரர்கள் களத்தில் இறங்கி திறமைகளை வெளிப்படுத்தினர்.



திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித் தலைவர் மு.பிரதாப் தலைமையில் எதிர்வரும் தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026 னை முன்னிட்டு, திருவள்ளூர் மாவட்டத்திற்கு அருகில் உள்ள எல்லை மாநிலமான ஆந்திரபிரதேசம் மாநிலத்தில் உள்ள சித்தூர் மற்றும் திருப்பதி மாவட்டத்தின் மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர்களுடன் எதிர்வரும் சட்டமன்றத் தேர்தல் நடைபெறும் சமயத்தில் சட்டவிரோத பணபரிவர்த்தனை / பொருட்கள் / மதுவகைகள் / போதைவஸ்துகள் எடுத்து வருவதை தடுப்பதற்க்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்பாக கலந்தாய்வுக் கூட்டம் நடைப்பெற்றது. இக்கூட்டத்தில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் விவேகானந்த சுக்லா, பொன்னேரி சார் ஆட்சியர் ரவிகுமார், மாவட்ட வருவாய் அலுவலர் ச.சுரேஷ் மற்றும் துறை சார்ந்த உயர் அலுவலர்கள் உள்ளனர்.

# தருமபுரி ராஜகோபால் கவுண்டர் புறநகர் பேருந்து நிலையத்தில் மீண்டும் பேருந்துகளை இயக்க வணிகர்கள் பொதுமக்கள் கோரிக்கை !




தருமபுரி, பிப்ரவரி. 09-

தருமபுரி புறநகர் பேருந்து நிலையத்தை இடமாற்றம் செய்ததால் பேருந்து நிலையம் மற்றும் அதை சுற்றியுள்ள வணிகர்களின் வாழ்வாதாரம் கேள்விக்குறியாகி உள்ளது என வணிகர்கள் தெரிவித்தனர். இந்த ராஜகோபால் கவுண்டர் புறநகர் பேருந்து நிலையத்தை முன்னாள் முதலமைச்சர் எம்ஜிஆர் 28 - 9 - 1980 அன்று திறந்து வைத்தார். இதை தொடர்ந்து தமிழக முதலமைச்சர் ஸ்டாலின் 2021 சட்டமன்ற பொது தேர்தலின் போது தருமபுரி பேருந்து நிலையம் தற்போது இருக்கும் இடத்திலே புதுப்பித்து செயல்படும் என்று வாக்குறுதி அளித்தார். ஆனால் திமுக அரசு ஆட்சி பொறுப்பேற்ற பிறகு இரண்டு ஆண்டுகள் கழித்து தருமபுரி - பென்னாகரம் செல்லும் சாலையில் புதிய பேருந்து நிலையம் அமைக்கும் பணி தொடங்கப்பட்டது.

இந்த புதிய பேருந்து பணிகளை முதலமைச்சர் ஸ்டாலின் நேரில் சென்று ஆய்வு செய்தார். இந்த நிலையில் சோகத்தூர் அருகே புதிதாக கட்டப்பட்டுள்ள பேருந்து நிலையத்தை கடந்த 5 - 2 - 2026 அன்று முதல்வர் காணொளி காட்சி வாயிலாக திறந்து வைத்தார். இதை தொடர்ந்து ராஜகோபால் கவுண்டர் பேருந்து நிலையத்தில் இருந்த அனைத்து பேருந்துகளும் புதிய பேருந்து நிலையத்திற்கு உடனடியாக மாற்றப்பட்டது. தருமபுரி ராஜகோபால் கவுண்டர் பேருந்து நிலையத்திலிருந்து புதிய பேருந்து நிலையம் ஐந்து கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. இந்த புதிய பேருந்து நிலையத்தில் இருந்து பேருந்துகள் இயக்கப்படுவதால் 40 ஆண்டு காலமாக இயங்கி வந்த தருமபுரி ராஜகோபால் கவுண்டர் பேருந்து நிலையம் தற்போது வெறிச்சோடி காணப்படுகிறது. இதற்கு முன்பு இயக்கப்பட்டு வந்த ராஜகோபால் கவுண்டர் பேருந்து நிலையத்தை நம்பி இருந்த வணிகர்கள், சிறு தொழில் செய்பவர்கள் தங்களது வாழ்வாதாரமின்றி உள்ளனர்.

இது தொடர்பாக பேருந்து நிலையத்தில் கடை வைத்திருக்கும் வணிகர்கள் கூறியதாவது. பேருந்து நிலையத்திற்கு வரும் பயணிகளை நம்பி தான் நாங்கள் வியாபாரம் செய்து வந்தோம். ஆனால் பேருந்து நிலையம் இடம் மாற்றியதால் எங்களைப் போல் கடை வைத்திருக்கின்றவர்கள் பெருமளவில் பாதிப்படைந்து உள்ளார்கள். மேலும் பேருந்து நிலையத்தை சுற்றி உள்ள வணிகர்களின் வாழ்வாதாரம் கேள்விக்குறியாகி உள்ளது. இதனால் புதிய பேருந்து நிலையத்தில் இயங்கி வரும் பேருந்துகளை மீண்டும் பழைய பேருந்து நிலையத்திற்கு மாற்றி தந்து எங்களுடைய வாழ்வாதாரத்தையும், வசதியும் செய்து தர வேண்டுமென்று வணிகர்கள், பொதுமக்கள் ஆகியோர் மாவட்ட நிர்வாகத்திற்கு கோரிக்கை வைத்துள்ளனர்.

# ராமநாதசுவாமி திருக்கோவில் மகா சிவராத்திரி திருவிழா கொடியேற்றத்துடன் தொடங்கியது !



இராமேஸ்வரம், பிப்.09–

ராமேஸ்வரம் ராமநாதசுவாமி கோவிலில் மாசி மகா சிவராத்திரி திருவிழா கோவில் குருக்கள் சந்தோஷ் ஜோஷி தலைமையில் தங்க கொடிமரத்திற்கு சிறப்பு அபிஷேகங்கள் பூஜைகள் செய்யப்பட்டு கொடியேற்றத்துடன் தொடங்கியது.

ராமநாதசுவாமி திருக்கோவிலில் முக்கிய திருவிழாக்களான ஆடி அமாவாசை தை அமாவாசை மகா சிவரத்திரி திருவிழா நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றது.

மாசி மகா சிவரத்திரி திருவிழா தொடங்குவதையடுத்து சுவாமி சன்னதி முன்புள்ள தங்க கொடி மரத்தில் கோவில் குருக்கள்கள் சிறப்பு பூஜைகள் மற்றும் அபிஷேகம் செய்யப்பட்டு மகா சிவரத்திரி திருவிழா கொடியேற்றத்துடன் தொடங்கியது.

ராமநாதசுவாமி மற்றும் பர்வதவர்த்தினி அம்பாளுக்கு சிறப்பு பூஜைகள் மற்றும் தீபாரதணைகள் நடைபெற்றது.இந்த திருவிழாவின் முக்கிய நிகழச்சியான வருகிற 15ம் தேதி மாசி மகா சிவராத்திலீஜீ இரவு வெள;ளிரதம் புறப்பாடு 16ம் தேதி தேதி சுவாமி அம்பாள் திருத்தேரோட்டம் 17ம் தேதி மறைநிலா அமாவாசை அன்று அக்னிதீர்த்ததில் தீர்த்தவாரி உற்சவமும் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் இந்தியா முழுவதிலும் இருந்து சாதுக்களும் பக்தர்களும் மகா சிவராத்திரி அன்று அதிக அளவில் ராமேஸ்வரத்திற்கு வருகை புரிந்து சிவனுக்கு கங்கா அபிஷேகம் செய்து தரிசனம் செய்து வருவது பாரம்பாரிய வழக்கமாகும்.இத்திருவிழா 08.02.26 முதல் தொடங்கி 19.02.26 வரை 12 நாட்கள் மாசி மகா சிவராத்திரி திருவிழா நடைபெற உள்ளது என்பது குறிப்பிடதக்கது. இந்நிகழ்ச்சியில் கோவில் இணை ஆணையர் செல்லத்துரை உதவி ஆணையர் ரவீந்திரன் செயல் அலுவலர் முத்துச்சாமி மேலாளர் வெங்கடேன் கோட்ட' பொறியாளர் மயில்வாகணன் உதவி பொறியாளா; ராமமூர்த்தி பேஷ்கார்கள் கமல்நாதன் முனியசாமி நாகராஜன் அரசியல் கட்சி பிரமுகா;கள் சுற்றுலா பயணிகள் பக்தர்கள் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

# அமைச்சர் மனோதங்கராஜை வீழ்த்த பா.ஜ.க அதிரடி திட்டம்

## தேர்தல் நிலவரத்தை விவரிக்கிறார் மூத்த பத்திரிகையாளரும், அகில இந்திய தமிழர் கழகத்தின் நிறுவனருமான முத்துக்குமார்





நாகர்கோவில், பிப்ரவரி. 09-

2026 தேர்தல் நெருங்கி விட்டது. பலரும் கட்சி வேஷ்டிகளை கட்ட ஆரம்பித்து விட்டார்கள். தனக்கும் எம்.எல்.ஏ ஆக வேண்டும் என்கிற எண்ணத்தில் தொலைந்து போன ஆட்கள் கூட களத்தில் இறங்கி விளையாட ஆரம்பித்து விட்டார்கள். அவர்கள் யார்? கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள ஆறு சட்டமன்றத் தொகுதிகளின் நிலவரம் என்ன? தேர்தல் கூட்டணி எந்த விதத்தில் அமையும் என்பதை மூத்த பத்திரிகையாளரும், அகில இந்திய தமிழர் கழகத்தின் நிறுவருமான முத்துக்குமார் தொடர்ந்து விவரிக்க இருக்கிறார். அவர் தற்போது கூறியதாவது:-

கன்னியாகுமரி மாவட்டத்தில் நாகர்கோவில், கன்னியாகுமரி, குளச்சல், பத்மனாபபுரம், விளவங்கோடு, கிள்ளியூர் ஆகிய ஆறு சட்டமன்றத் தொகுதிகள் உள்ளன.

இந்த ஆறு சட்டமன்றத் தொகுதிகளில் 2021 தேர்தலில் திமுகவும், அதிமுகவும் தலா ஒரு இடத்தையே பெற்றுள்ளது. மீதியுள்ள நான்கு தொகுதிகளில் மூன்று தொகுதிகளை காங்கிரஸ் கட்சியும், ஒரு தொகுதியை பாஜகவும் கைபற்றியது.

2026 தேர்தல் முடிவுகள் கன்னியாகுமரி மாவட்டத்தில் எப்படி இருக்கும் என்பதை பலரும் உற்று கவனித்து வருகிறார்கள்.

நாகர்கோவில் தொகுதியில் பாஜக சார்பில் போட்டியிட்டு சட்டமன்ற உறுப்பினராகியுள்ள எம்.ஆர். காந்தி மீண்டும் தேர்தலில் போட்டியிடுவாரா? என்கிற கேள்விக்குறி எழுந்துள்ளது. வயது மூப்பின் காரணமாக பாஜக வில் இளைய தலைமுறையினருக்கு தொகுதியை விட்டுக் கொடுக்கலாம் என்கின்றனர் சிலர். இல்லை, இல்லை. காந்தியாரே மீண்டும் போட்டியிட உள்ளார் என வேறு சிலரும் சொல்வதை கேட்க முடிகிறது. முன்னாள் மத்திய அமைச்சர் கூட இந்த தொகுதியில் போட்டி யிட தயாராக இருப்பதாகவும் தகவல்கள் உள்ளன. ஆனால் பொன்னார் போட்டியிட வேறு தொகுதி காத்திருப்பதாகவும் செய்திகள் கசிந்துள்ளன.

கன்னியாகுமரி தொகுதியை பொறுத்தவரை முன்னாள் அமைச்சர், இந்நாள் எம்எல்ஏ வான தளவாய் சுந்தரத்தை வீழ்த்துவதற்கு அதிமுகவினர் பலருமே எதிர் வேலை செய்து வருவதாக தெரிகிறது. இரண்டு நாட்களுக்கு முன்பு கூட முன்னாள் மாவட்ட செயலாளர் அசோகன், தளவாய் சுந்தரத்திற்கு எதிராக ஒரு வீடியோ பதிவை வலை தளங்களில் பரவ விட்டுள்ளார். அந்த வீடியோ அதிமுகவினரின் மத்தியில் பெரும் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது.

குளச்சல் சட்டமன்றத் தொகுதியில் எம்எல்ஏவாக இருக்கும் பிரின்ஸை தோற்கடிப்பதற்கு பல முனைகளில் எதிராக செயல் பட தொடங்கியுள்ளனர். இந்த முறை அதிமுக தரப்பில் போட்டியிடும் வாய்ப்புகள் அதிகம் உள்ளன என்கிறார்கள் அரசியல் கருத்தாளர்கள். அதிமுகவில் நாஞ்சில் வின்செண்ட், பச்சைமால், போன்றோர் சீட் தலைமையிடத்தை நாடி உள்ளதாக தகவல். மேலும் திமுக கூட்டணிக்கு எதிராக தவெக தரப்பிலும் பலத்த வேட்பாளரை நிறுத்த போவதாக தகவல். ஜேப்பியாரின் மகள் டாக்டர் மரியசீனா என்பவர் களத்தில் இறங்கி வேலை செய்து வருவதாகவும் நம் காதுகளுக்கு செய்திகள் வந்துள்ளன. அரசியல் அனுபவம் இல்லாத மரியசீனா தேர்தல் களத்தில் தாக்கு பிடிப்பாரா என்பது சந்தேகம்தான்.

பத்மனாபபுரம் தொகுதியில் அமைச்சர் மனோதங்கராஜை வீழ்த்த பாஜக முனைப்புடன் செயல் படுவதாக தகவல்கள் கசிந்துள்ளது. குளச்சல் தொகுதியை அதிமுகவுக்கு கொடுத்து விட்டு பத்னாபபுரத்தில் பாஜக போட்டியிட ஆயத்த வேலைகள் நடந்து வருகிறது என்று முனுமுனுத்து கொண்டிருப்பதை கேட்க முடிந்தது. அதுவும் பாஜக வேட்பாளராக பொன்னாரே பெரும்பாலும் இருக்க கூடுமாம். பொன்னாருக்கு சொந்த செல்வாக்கு வாக்குகள் 30 ஆயிரத்திற்கு மேல் இருப்பதாக பாஜக வினரே சொல்லுகிறார்கள்.

விளவங்கோடு தொகுதியைப் பொறுத்தவரை காங்கிரஸ் வசம் உள்ள தாரகை கத்பர்ட்டை எதிர்த்து பாஜக சார்பில் போட்டியிட முன்னாள் எம்எல்ஏ விஜயதரணி பல முனைகளில் முயன்று வருவதாக தகவல். இதற்காக தினமும் கமலாயத்திற்கு சென்று வருவதாகவும் செய்திகள் பரவியுள்ளன.

கிள்ளியூர் சட்டமன்றத் தொகுதியில் எம்எல்ஏவாக இருக்கும் ராஜேஷ் குமாரை வீழ்த்த கஷ்டம் என்றாலும், அவரது செல்வாக்கை குறைக்கும் வகையில் நான்காவது அணி வேட்பாளர் ஒருவர் செயல்பட்டு வருவதாக தகவல். இருந்தாலும் ராஜேஷ் குமார் தொகுதியை முழுக்க இப்போதே தேர்தல் பிரச்சாரத்தில் இறங்கி விட்டதாக தகவல்.

**இது போன்ற தகவல்களை தொடர்ந்து தர இருக்கிறேன். நன்றி.**

# குருக்கள் பட்டி தந்தை பெரியார் நினைவு சமத்துவபுரம் திறப்பு - ராஜா எம்எல்ஏ பங்கேற்பு



சங்கரன்கோவில், பிப்.9-

சங்கரன்கோவில் சட்டமன்ற தொகுதியில் தமிழ்நாடு ஊரக வளர்ச்சித் துறையின் சார்பில் தென்காசி மாவட்டம், மேலநீலிதநல்லூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட குருக்கள்பட்டியில் தந்தை பெரியார் சமத்துவபுரத்தினை முதலமைச்சர் மு க ஸ்டாலின் சென்னையில் இருந்து காணொளி காட்சி மூலம் திறந்து வைத்தார். அதனைத் தொடர்ந்து நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட கலெக்டர் கமல்கிஷோர் மற்றும் தென்காசி வடக்கு மாவட்ட திமுக செயலாளர் ராஜா எம்எல்ஏ ஆகியோர் கலந்துகொண்டு பயனாளிகளுக்கு வீட்டுமனைகளுக்கான ஆணைகள் மற்றும் சாவிகளை வழங்கினர்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவிக்கையில்,

தமிழ்நாடு முதலமைச்சர் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைகள் சார்பில் பல்வேறு திட்டப் பணிகளை திறந்து வைத்தார்கள் அதன் அடிப்படையில் தென்காசி மாவட்டம், மேலநீலிதநல்லூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட குருக்கள்பட்டியில் தந்தை பெரியார் சமத்துவபுரத்தினை திறந்து வைத்தார். இந்த சமத்துவபுரம் 100 வீடுகள், அங்கன்வாடி மையம், நியாய விலை கடை சிறுவர் பூங்கா மற்றும் விளையாட்டு திடல், 24 மணி நேரம் குடிநீர் வசதி கிடைக்கும் வகையில் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி, தார் சாலை மின்விளக்குகள் போன்ற அனைத்து அடிப்படை வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது என மாவட்ட கலெக்டர் கமல்கிஷோர் தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் தண்டபாணி, செயற் பொறியாளர் ஹசன்இப்ராஹிம், மேலநீலிதநல்லூர் ஒன்றிய செயலாளர்கள் கிழக்கு பெரியதுரை, தெற்கு பால்ராஜ்,மேலநீலிதநல்லூர் ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர் மாதவி, ஒன்றிய கவுன்சிலர் ராஜா தலைவர், ஊராட்சி மன்ற தலைவர்கள் மகேஷ் (குருக்கள்பட்டி), திருமதி.சுமதி (பட்டாடை கட்டி), சங்கரன்கோவில் நகர செயலாளர் பிரகாஷ், , கிளை செயலாளர்கள் நாகராஜன், சுகுமாரன், இளைஞரணி ஜான்சன் ஊராட்சி மன்ற தலைவர் பொன்னம்மாள் பரமசிவன் மற்றும் அரசு அலுவலர்கள், பிரதிநிதிகள் உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.






# கன்னியாகுமரி வெங்கடாஜலபதி கோவில் வருஷாபிஷேகம்



கன்னியாகுமரி,பிப்.09-

கன்னியாகுமரி விவேகானந்தபுரத்தில் உள்ள திருப்பதி வெங்கடாஜலபதி கோவிலில் கடந்த 2019-ம் ஆண்டு ஜனவரி மாதம் 27-ந் தேதி மகா கும்பாபிஷேகம் நடந்தது. இதையடுத்து வருஷாபிஷேக விழா இந்த ஆண்டு நட்சத்திர திதிபடி சப்தமி திதியான நேற்று நடந்தது. இதைத்தொடர்ந்து காலை 6 மணிக்கு கோவில் நடைதிறக்கப்பட்டு சுப்ரப சேவையும், புண்ணிய வாசனம், அங்குரார்பன ரக்சாபந்தனம், விசேஷ ஹோமம், அஸ்டோத்து ஸத கலசாபிஷேகம், உற்சவமூர்த்திக்கு மகா சாந்தி ஹோமம், பூர்ணாகுதி, அச்சதாரோபனம் போன்றவை நடந்தது.

பின்னர் சதாகலசாபிஷேக பூஜை நடந்தது. அதன் பிறகு சுவாமிக்கு திருமஞ்சனம் சாத்துதலும், யாக சாலை பூஜையும் நடந்தது.பின்னர் ஹோமம், யாகம் அபிஷேகம், தீர்த்த பிரசாதம் வ ழங்குதல் போன்றவைகளும் நடந்தது. அலங்கார தீபாராதனை நடந்தது. இந்த பூஜைகளை வெங்கடாஜலபதி கோவில் அர்ச்சகர்கள் நடத்தினார்கள்.

பின்னர் பக்தர்களுக்கு அன்னதான வழங்கப்பட்டது. இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர் இதற்கான ஏற்பாடுகளை கோவில் நிர்வாகம் செய்திருந்தது.

# இராமநாதபுரம் அருகே பட்டா மாறுதலுக்கு லஞ்சம் பெற்ற கிராம நிர்வாக அலுவலர் கைது



இராமநாதபுரம், பிப்.09-

இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் தாலுகாவைச் சேர்ந்த ஒரு நபர் தனது பெயருக்கு பட்டா மாறுதல் செய்ய விண்ணப்பித்திருந்தார். இந்தப் பணியைச் செய்து தர புதுமடம் கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி வரும் அனுராஜ் (வயது 36) என்பவர் ரூ. 5,000 லஞ்சம் கோரியுள்ளார்.

லஞ்சம் கொடுக்க விரும்பாத மனுதாரர் இது குறித்து இராமநாதபுரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு போலீஸில் புகார் செய்தார் லஞ்ச ஒழிப்பு துறை போலீஸாரின் அறிவுத்தலின் பேரில் ரசாயனம் தடவிய பணம் ரூ. 5,000-ஐ கிராம நிர்வாக அலுவலர் அனுராஜிடம் கொடுக்கும் போது, அவர் பணத்தைப் பெற்றுக்கொண்டார். அப்போது அங்கு மறைந்திருந்த லஞ்ச ஒழிப்பு போலீசார் அவரை பிப்,8 அன்று கையும் களவுமாக பிடித்தனர்.

அவரிடமிருந்து லஞ்சப் பணம் பறிமுதல் செய்யப்பட்டு, அவர் மீது ஊழல் தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. அவர் நீதிமன்றக் காவலுக்கு அனுப்பப்பட்டுள்ளார்.

# சாமிதோப்பு, கரும்பாட்டூர் பகுதியில் சாலைகளில் சுற்றித்திரியும் தெருநாய்களுக்கு தடுப்பூசி



தென்தாமரைகுளம், பிப்.9-

குமரி மாவட்டத்தில் தெரு நாய்கள் தொல்லை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. சமீபத்தில் மணக்குடி பகுதியில் தெருநாய் ஒன்று குழந்தைகள் உள்பட 13 பேரை விரட்டி விரட்டி கடித்து குதறியது. இதையடுத்து அனைத்து கிராம பகுதிகளிலும் தெருநாய்களை பிடித்து கருத்தடை ஊசி செலுத்த அறிவுறுத்தப்பட்டது. கிராம ஊராட்சி சார்பில் அந்தந்த ஊராட்சி பகுதிகளில் தெருக்களில் சுற்றித் திரியும் நாய்களை பிடித்து தடுப்பூசி செலுத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டது.

இதையடுத்து சாமிதோப்பு. கரும் பாட்டூர் ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சுற்றித்திரியும் தெருநாய்களை

பிடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதற்காக விருதுநகரில் இருந்து ஒரு குழுவினர் வந்திருந்தனர், அவர்கள் தெருக்களில் சுற்றித்திரிந்த நாய்களை வளைவிரித்து பிடித்தனர். பிடிபட்ட நாய்களுக்கு தடுப்பு ஊசி செலுத்தப்பட்டது. நேற்று முன்தினம் ஒரே நாளில் 30 நாய்கள் சிக்கியது. அந்த நாய்களுக்கு டாக்டர் குழுவினர் தடுப்பு ஊசி செலுத்தினர்.

# விவசாயிகளின் கோரிக்கையை அரசு நிறைவேற்ற வேண்டும்

## விவசாயிகள் சங்க தமிழக ஒருங்கிணைப்பாளர் பி.ஆர். பாண்டியன் கன்னியாகுமரியில் பேட்டி!!




கன்னியாகுமரி, பிப்.9-

அரசியல் சார்பற்ற ஐக்கிய விவசாயிகள் சங்கம் சார்பில் தேசிய ஒருங்கிணைப்பாளர் ஜக்ஜித்சிங் தல்லேவால் தலைமையில் கன்னியாகுமரி முதல் காஷ்மீர் வரை விவசாயிகள் யாத்திரை நடைபெற்றது. இதில் தமிழக ஒருங்கிணைப்பாளர் பி.ஆர்.பாண்டியன், தலைவர் அய்யாக்கண்ணு, குமரி மாவட்ட செயலாளர் மற்றும் பாசன துறை சேர்மன் வின்ஸ் ஆன்றோ உள்ளிட்ட 30 பேர் கொண்ட குழு யாத்திரையில் பங்கேற்றனர்.

பி.ஆர். பாண்டியன் செய்தியாளர்களிடம் கூறுகையில்:-

விவசாயிகளின் கடனை தள்ளுபடி செய்ய மத்திய அரசு மறுக்கிறது. ஆனால் கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு 14 1/2 லட்சம் கோடி ரூபாயை தள்ளுபடி செய்திருக்கிறது.

விவசாயிகள் தற்கொலை தொடர்ந்து கொண்டிருக்கிறது. விவசாயிகள் உற்பத்தி பொருட்களுக்கு லாபகரமான விலை கொடுக்க மறுக்கிறது.

கடந்த 2014 ஆம் ஆண்டு பாரதிய ஜனதா கட்சி தனது தேர்தல் அறிக்கையில் நாங்கள் ஆட்சிக்கு வந்தால் எம்.எஸ். சாமிநாதன் குழு பரிந்துரையை நிறைவேற்றுவோம், விவசாயிகள் கடன் தள்ளுபடி செய்வோம் என்று அறைகூவல் விடுத்தார்கள். 10 ஆண்டுகாலம் நிறைவு பெற்றுவிட்டது. இதுவரையிலும் அதை நிறைவேற்ற முன்வரவில்லை.

எனவே கோரிக்கைகளை வலியுறுத்தி குமரி முனையிலிருந்து காஷ்மீர் வரை மிகப்பெரிய யாத்திரையைத் தொடங்கியிருக்கிறார்கள். வருகிற மார்ச் 19ஆம் தேதி இந்த யாத்திரை நிறைவாக டெல்லி ராம்லீலா மைதானத்தில் பல லட்சக்கணக்கான விவசாயிகள் பங்கேற்கிற மாபெரும் பேரணி நடைபெற இருக்கிறது. எனவே ஒட்டுமொத்த இந்தியாவில் இருக்கக்கூடிய அனைத்து மாநிலங்களின் ஒப்புதலோடு மத்திய அரசு விவசாயிகள் கோரிக்கை நிறைவேற்ற வேண்டும் என்கிற அடிப்படையிலேயே இந்த யாத்திரை இன்றைக்கு புறப்படுகிறது. அனைத்து மாநிலங்களைச் சார்ந்திருக்கிற பிரதிநிதிகள் இங்கே இடம் பெற்றிருக்கிறார்கள். 30 பேர் கொண்ட குழு காஷ்மீர் வரையிலும் செல்ல இருக்கிறது. 10 ஆம் தேதி காலையில் சேலத்திலும் மிகப்பெரிய மகாசபை கூட்டங்கள் நடைபெற இருக்கிறது. அடுத்து கர்நாடகாவிற்குள் நுழைய இருக்கிறது.

தமிழக முதலமைச்சரை சந்திப்பதற்கு அனுமதி கோரி இருக்கிறோம். அவர் அனுமதி தந்தால் சந்திப்பதற்கு 9-ஆம் தேதி அங்கே அவரைச் சந்திப்போம். பயணம் ஒவ்வொரு மாநில வழியாக காஷ்மீர் வரைச் செல்கிறது. மாநில அரசு மத்திய அரசு எடுக்கக்கூடிய இந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு உரிய அழுத்தம் கொடுக்க வேண்டும். எல்லா மாநில முதலமைச்சர்களையும் சந்திக்க இருக்கிறோம்.

எங்களுடைய தேர்தல் களத்தில் கள் இறக்குவதற்கு அனுமதி கொடுக்க வேண்டும், குடிமராமத்துத் திட்டத்திற்கு அனுமதி கொடுக்க வேண்டும், தமிழ்நாடு அரசின் நில ஒருங்கிணைப்புச் சட்டத்தைத் திரும்பப் பெற வேண்டும், விவசாயிகள் கடன் தள்ளுபடி செய்ய வேண்டும் இதற்கு ஒப்புதல் கொடுக்கிற அரசியல் கட்சிகளுக்கே விவசாயிகள் வாக்களிப்பார்கள் என்கிற தீர்மானத்தையும் நாங்கள் தேர்தலுக்கு முன்னதாக நிறைவேற்ற உள்ளோம்.

தமிழ்நாடு அரசு கன்னியாகுமரி மாவட்டத்தில் நீர்வழிப் பாதைகளை நான்கு வழிச் சாலைகள் அமைக்கிறோம், ரயில் தடங்கள் அமைக்கிறோம் என்கிற பெயரில் ஆக்கிரமிப்புச் செய்கிறார்கள், குளங்கள் ஆக்கிரமிப்புச் செய்யப்படுகிறது.

இதையெல்லாம் எதிர்த்து விவசாயிகள் போராடி வருகிறார்கள். எனவே உடனடியாக உயர்மட்டக் குழு அமைத்து இந்த பாசன வடிகால்கள் தடுப்பதையும் குளங்கள் ஆக்கிரமிப்பு செய்வதையும் தடுத்து நிறுத்த முன்வர வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# அஞ்சுகிராமம் அருகே மனைவி உட்பட 3 பேருக்கு வெட்டு - ரவுடி கைது

**நாகர்கோவில், பிப்.9–**

**நாகர்கோவில், மேலபெருவிளை பகுதியை சேர்ந்தவர் பிபின்லால் (36). இவரது மனைவி அஸ்வினி. குடும்ப தகராறு காரணமாக கணவன் மனைவி இருவரும் பிரிந்து வாழ்ந்து வருகின்றனர். அஸ்வினி தற்போது தோப்பூர் பகுதியில் உள்ள தனது பெற்றோர் வீட்டில் வசித்து வருகிறார். மனைவியை பலமுறை நேரில் சென்று குடும்ப நடத்த அழைத்தும் அவர் செல்லவில்லை என்று கூறப்படுகிறது. இந்த நிலையில் சம்பவ தினம் இரவில் பிபின்லால் தனது கூட்டாளிகளுடன் சேர்ந்து மனைவியின் வீட்டிற்கு சென்று தகராறு செய்துள்ளார். அப்போது அந்த கும்பல் மனைவி அஸ்வினி, மாமனார் வேல்முருகன் (56), மைத்துனர் செல்வன் (20) ஆகியோரை சரமாரியாக அரிவாளால் வெட்டினர். இதில் மூன்று பேரும் படுகாயம் அடைந்தனர். காயமடைந்தவர்களை உடனடியாக குமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அங்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இந்த சம்பவம் குறித்து அஞ்சுகிராமம் போலீசார் பிபின்லால் மற்றும் அவருடன் வந்த ராகேஷ் (27) உள்ளிட்டோர் மீது வழக்கு பதிவு செய்தனர் . இதில் விபிலால் பெயர் ஆசாரிப்பள்ளம் போலீஸ் நிலையத்தில் ரவுடிகள் பட்டியலில் இடம் பெற்றுள்ளது தெரிய வந்தது. இதில் தலை குறைவாக இருந்த விபின்லாலை போலீசார் கைது செய்தனர். போலீசார் விசாரணையில் மனைவியை அழைத்துச் செல்ல சென்ற போது மனைவி வர மறுத்து ஆத்திரத்தில் பேசியதால் வெட்டியதாக தெரிவித்துள்ளார். போலீசார் நீதிமன்றத்தில் அவரை ஆஜர் படுத்தினார்.**

# ஜல்லிக்கட்டு காளை முட்டியதால் மூளைச்சாவு அடைந்த வாலிபரின் உடல் உறுப்புகள் தானம் - 5 பேர் பயன் பெற்றனர்



தஞ்சாவூர், பிப்ரவரி. 9-

ஜல்லிக்கட்டு காளை முட்டியதால் சிகிச்சை பெற்ற வாலிபர் மூளைச் சாவு அடைந்தார்.இதனையடுத்து அவரது உடல் உறுப்புகள் தானம் பெற்ற தன் மூலம் 5 பேர் பயன் பெற்றனர்

புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் தாலுக்கா எலம்பட்டி குலமங்கலம் சின்னையா (வயது 17). இவர் கடந்த பிப்ரவரி 2-ந் தேதி மாலை 4 மணி அளவில், புதுக்கோட்டை பகுதியில் ஜல்லிக்கட்டுக்கு சென்ற போது மாடு முட்டியதால் பலத்த காயம் அடைந்தார். இதை தொடர்ந்து புதுக்கோட்டை அரசு மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டது. பின்னர் மேல் சிகிச்சைக்காக தஞ்சாவூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை யில் 2-ம் தேதி அனுமதிக்கப்பட்டார்.

அங்கு டாக்டர்களின் கண்காணிப்பில் இருந்த சின்னையா மூளைச் சாவு அடைந்தார். இதையடுத்து அவரது உடல் உறுப்புகள் தானமாக பெறுவது தொடர்பாக அவரது அம்மா வீரம்மாள் மற்றும் அண்ணன் செல்வகணபதி ஆகியோருக்கு டாக்டர்கள் எடுத்துரைத்தனர். இதனையடுத்து அவரது உடல் உறுப்புகளை தானம் அளிக்க அவரது குடும்பத்தினரும் ஒப்புதல் அளித்தனர். அதன்படி, சின்னையா உடலில் இருந்த கல்லீரல், சிறுநீரக ங்கள், கருவிழிகள், தோல் ஆகிய வை அறுவை சிகிச்சை மூலம் அகற்றப்பட்டன. கல்லீரல் புதுக்கோட்டையில் உள்ள தனியார் ஆஸ்பத்திரிக்கும், ஒரு சிறுநீரகம் மதுரை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கும், மற்றொரு சிறுநீரகம், தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கும், ,கருவிழிகள் ராசா மிராசுதார் மருத்துவமனைக்கும் , தோல் தனியார் மருத்துவமனைக்கும் தானமாக வழங்கப்பட்டன.

உடல் உறுப்புகள், தஞ்சாவூர் மருத்துவமனை ஆம்புலன்ஸ் மூலம் போலீஸ் உதவியுடன் விரைவாக அனுப்பி வைக்கப்பட்டன. இதையடுத்து சின்னையா உடலுக்கு, தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் .பூவதி தலைமையில் அரசு இறுதி மரியாதை செய்தனர். இந்த உடல் உறுப்புகள் தானத்தின் மூலம் 5 நபர்கள் பயன் பெற்றனர்.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001. Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.